DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
CC. No. 12 of 2020
Prosecution witness : LW - 1/ PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வீரராகவன் (எ) பாபு | Caste | : | |
| Father Name | : | அரமாண்டி | Calling | : | |
| Village | : | பெரம்பூர் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 46 |

(Accused called present.)
solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2024 .

முதல் விசாரணை தொடர்ச்சி நேரம் 4.25

1. 15 நாட்கள் கழித்து பணம் கொடுப்பதாக எதரி சொன்னார் ஆனால் பணம் கொடுக்கவில்லை, திரும்பவும் 15 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் சொன்னேன். 1 மாதத்திற்குள் பணம் கொடுப்பதாக அவருடைய தந்தை சுப்பிரமணியும் எழுதி கொடுத்தார்கள். ஒரு மாதம் கழித்து பணம் கொடுக்கவில்லை. திரும்பவும் காவல் நிலையத்திற்கு சென்று சொன்னேன். அவர்கள் கொடுப்பதாக சொல்கிறார்கள் ஆனால் பணம் தரவில்லை என்று காவல் நியைத்தில் சொன்னேன் பிறகு திருவள்ளூர் எஸ்.பி ஆபிஸில் சென்னேன் அதன் பிறகு ஊத்துக்கோட்டை காவல் நிலையத்திற்கு மாற்றினார்கள், எனது வீட்டிற்கு சம்மன் வந்தது, அதன் பிறகு என்னிடம் இருக்கும் ஆவணத்தை கொண்டு வரச்சொன்னார்கள், நானும் ஆவணத்துடன் காவல் நிலையம் சென்றேன். எதிரி ஜகன் காவல் நிலையத்திற்கு அன்று வரவில்லை. நான் 4 மணியளவில் காவல் நிலையத்தில் இருந்து விட்டு நான் பிறகு சென்றுவிட்டேன். அதன் பிறகு திருவள்ளூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து எனக்கு நேட்டிஸ் வந்தது அதன் பிறகு நான் அந்த வழக்கை 3 வருடங்களாக நடத்தினேன். அந்த வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது. அதன் பிறகு ஊத்துக்கோட்டை நீதிமன்றத்தில் தனி நபர் வழக்கு தொடர்ந்தேன்.

2. மேற்படி தனிநபர் வழக்கினை நான் எதிரிக்கு எதிராக நம்பிக்கை மோசடி ரூ 4,75,000 தரவேண்டியது அதில் ரூ.1,45,000 online Payment கொடுத்தார், மீதி ரூ.3,30,000 பாக்கி தராமல் ஏமாற்றுகிறார். கடந்த(2017) 7 வருடமாக என்னை எமாற்றி வருகிறார். கடந்த 7 வருடமாக நான் கோட்டிற்கு வந்து மனஉலைச்சலுக்கு ஆலாகி இருக்கின்றேன். ஆகவே எதிரியை இதச சட்ட பிரிவு 406, 420 கீழ் தண்டனை வழங்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்**

1. 23.04.2019 - பில் - நகல் - மசாஆ-1 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது. ,
2. 31.05.2019 - பில் - நகல் - மசாஆ-2 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

3. 10.07.2019 - T.J.Electrical properter Mr. Jagan Purchase Order to Mr.V.P. Agency Trought Watsapp Purchase Order - நகல் - மசாஆ-3 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

4.Mr.V.P. Agency Asked delivery address trough Mr.Jagan sending whatsapp message to delivery address send blue star company pvt., ltd., Varadhaiyapalayam Mandal, Andhra Pradesh - நகல் - மசாஆ-4 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

5. Sail Company Given ISI தர சான்றிதழ் வழ Blue Star Company - நகல் - மசாஆ-5 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

6. 12.07.2019 - பில் - நகல் - மசாஆ-6 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

7.வங்கியின் Statement - நகல் - மசாஆ-7 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

8. அவர்கள் பெற்றுக் கொண்டதர்கான எடை சீட்டு - நகல் - மசாஆ-8 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

9.அவர்கள் பெற்றுக் கொண்டதர்கான டெலிவரி சலான் எண்.44 - நகல் - மசாஆ-9 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

10. 18.07.2019 - ஊத்துக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் தந்தை மகன் பணம் கொடுப்பதாக எழுதிக் கொடுத்த கடிதம் - நகல் - மசாஆ-10 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

11. 22.07.2019 மற்றும் 19.07.2019 - பணம் தர இயலவில்லை என்ற காரணத்தை எடுத்துக் கூறி மீண்டும் ஊத்துக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் 15 நாட்கள் வீதம் 2 தவணையாக ஒரு லட்சம் வீதம் கொடுப்பதாக எழுதிக் கொடுத்த கடிதம் - நகல் - மசாஆ-11 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

12. 16.07.2019 - போலியான சலானை எடை குறைத்து குற்றம் முறையீடுபவர் ஏமாற்ற வேண்டும் என்ற Blue Star நிறுவன மேனேஜர் துணையோடு ஜெகன் அவரது TJ எலக்ட்ரிக்கல் சர்வீஸ் மற்றும் Man Power Supply Letter Pad-ல் கொடுத்த டெலிவரி சலான் - நகல் - மசாஆ-12 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

13. 16.09.2019 - உதவி ஆய்வாளர் குற்றம் முறையீடுபவருக்கு அனுப்பிய போலீஸ் சம்மன் - நகல் - மசாஆ-13 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

14. 19.08.2019 - காவலதுறை கண்காணிப்பாளர் மாவட்ட குற்றப்பிரிவு திருவள்ளூர் - நகல் - மசாஆ-14 ஆக குறியீடுச்செய்யப்படுகிறது.

ஆகியன குற்றமுறையீட்டாளரின் சான்றுகள் ஆகும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியம் முடிவுற்ற நேரம் பகல் 4.55.